மாகாணக்கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
மூன்றாம் தவணை – 2025

தமிழ்மொழியும் இலக்கியமும்	மூன்று மணித்தியாலங்கள்	22	T	I,II
	தரம் - 10			

கவனிக்க

(1) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

(2) 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் **(1), (2), (3), (4)** என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க .

(3) உமக்கு வழங்கப்பட்டடுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை **(X)** இடுக.

பகுதி - I

1. "தண்டேன் நுகரா மண்டுகம்..." இங்கு மண்டுகம் என்பது
   1. குளம் 2. தாமரை 3. தவளை 4. வண்டு

2. "ஆழும் நெஞ்சகத்து ஆசை இன்றுள்ளதேல்....." இங்கு ஆசை என்பது
   1. இலக்கு 2. வெறுப்பு 3. விருப்பு 4. இரக்கம்

3. "அறந்தானே யென்கின்ற அயல்நின்றாடனை நோக்கி....." இங்கு அறம் என்பதன் எதிர்ப்பதம்
   1. புறம் 2. மறம் 3. நிறம் 4.தர்மம்

4. பாணன் சீறி யாழை மீட்டிப் பாடல் பாடினான். இங்கு பாணன் என்பதன் எதிர்ப்பாற்சொல்
   1. குறத்தி 2. அணங்கு 3. தேவராட்டி 4. பாடினி

5. இன்று சிறுவர் மத்தியில் cartoon (காட்டூன்) பிரசித்தி பெற்று வருகின்றது. cartoon என்பதன் தமிழ் வடிம்
   1. கேலிச்சித்திரம் 2. நேர்காணல் 3. புகைப்படம் 4. ஒளிப்படம்

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

6. நான் காய்ச்சல் காரணமாக ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். "ஆஸ்பத்திரி" எம் மொழிச்சொல்
   1. டச்சு 2. பிரெஞ்சு 3. அரபு 4. தெலுங்கு
7. இட்டுச் கெட்டவர் எங்கும் இல்லை என்ற பழமொழியின் கருத்து
   1. உண்மை சொல்லி கெட்டவர் எங்கும் இல்லை
   2. ஈகை செய்து கெட்டவர் எங்கும் இல்லை
   3. பொறுமை கலந்து கெட்டவர் எங்கும் இல்லை
   4. சேமித்து கெட்டவர் எங்கும் இல்லை

8. படித்தாள் மதுஜா என்பது
   1. வினைமுற்றுத் தொடர் 2. எழுவாய்த் தொடர்
   3. பெயரெச்சத் தொடர் 4. வினையெச்சத் தொடர்
9. புராணக் கதைகளை சுவைபட பிரசங்கம் செய்வோர்
   1. பௌராணிகன் 2. நைட்டிகன் 3. சிரஞ்சீவி 4. ஊதாரி
10. "காவியாவில் நல்லவள்...." இங்கு இல் உருபு எந்தப் பொருளில் வந்துள்ளது
   1. நீங்கல் 2. ஒப்பு 3. எல்லை 4. ஏது

Past Papers Wiki

11. விரைவினை உணர்த்த பொருத்தமற்ற இரட்டைக்கிளவி
1. குடுகுடு 2. படபட 3. சலசல 4. விறுவிறு

12. அகப்புணர்ச்சி இடம்பெற்ற சொல் அல்லாதது
1. நாங்கள் 2. உண்டான் 3. போவான் 4. பூங்கொடி

13. தேனருவி என்பது எவ்வகை புணர்ச்சி
1. கெடுதல் 2. தோன்றல் 3. திரிதல் 4. இயல்பு

14. "பிள்ளைக் கனியமுதே கண்ணம்மா" இங்கு இடம்பெற்ற அணி
1. இயல்பு நவிற்சி 2. உயர்வு நவிற்சி 3. உருவகம் 4. உவமை

15. குரங்கு, பாட்டு, புலவன் என்பன குறிக்கும் சொல்
1. கவி 2. பாடல் 3. கரி 4. சரம்

16. ககரம் ஓலிக்கு நிகராக ஒலிக்கும் சொல்
1. கடல் 2. தங்கம் 3. மேகம் 4. கதவு

17. வினோதன் சென்றேன் என்பது
1. பால் வழு 2. எண் வழு 3. கால வழு 4. இடவழு

18. பிரசாத் பத்தை வெட்டினான். பத்தை எப் பிரதேச வழக்குச் சொல்
1. கிழக்கு 2. வடக்கு 3. தென்னிலங்கை 4. மலையகம்

19. "உம்மிலை வடிவில்லையே " என்ற பேச்சு வழக்கின் நியம வழக்கு
1. உன்மேல் வடிவில்லையா 2. உமது அழகில்லையா
3. உன்மேல் அழகில்லையா 4. நீங்கள் அழகில்லையா

20. பகுபதச் சொல்
1. நெருப்பு 2. மலர் 3. பெரியன் 4. சோலை

பின்வரும் வினாக்கள் ஒவ்வொவன்றுக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க

21. பின்வருவனவற்றுள் தொழிற்பெயர் அல்லாதது
1. ஓடுதல் 2. நன்மை 3. ஆடல் 4. தேட்டம்

22. பகுபதம் ஒன்றில் காலம் காட்டுவது
1. பகுதி 2. விகுதி 3. இடைநிலை 4. சுாரியை

23. குழவி,குழந்தை,பிள்ளை போன்ற இளமைப் பெயர்க்குரியது எது?
1. மக்கள் 2. ஆடு 3. முயல் 4. பூனை

24. சுஜீவன் வந்தவனை பார்த்தான் இங்கு வந்தவனை
1. **மாற்றுப்பெயர்** 2. **ஆக்கப்பெயர்** 3. **தொழிற்பெயர்** 4. **வினையாலணையும் பெயர்**

25. தென்னை மரம் என்பது
1. இடுகுறிப்பெயர் 2. காரணப்பெயர் 3. இடுகுறிசிறப்புப் பெயர் 4. பொருட்பெயர்

26. தற்சமம் அல்லாதது
1. கமலம் 2. இலக்குமி 3.குங்குமம் 4. அபாயம்

27. கருவிழி அழுதாள் இது எவ்வகை தொகை
1. உவமைத்தொகை 2. உம்மைத் தொகை 3. பண்புத்தொகை 4. அன்மொழித்தொகை

28. அகராதி ஒழுங்கில் அமைந்த சொற்தொகுதி
1. பிள்ளை, பிறகு , பின்னல், பீதாம்பரம் 2. மாணவர், மேசை, மையல் மாதம்
3. ஆட்டம், ஆய்வு , ஆதரவு , ஆய்வு 4. பெயர், பதிவு, சௌகரியம், யானை

பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்ற சொற்தொகுதியைத் தெரிவு செய்க
29. 1. ஆறாம் வேற்றுமை - எனது வீடு , மரத்தின் இலை . எனது கை
2. இடைச்சொல் - உம், ஐ, போல

3. தொழிற்பெயர் - பறத்தல், ஓடுதல், நடத்தல்
4. ஆக்கப்பெயர் - மூச்சு, ஏச்சு , பேச்சு

30. 1. கூட்டுவினை - கட்டிப்பிடி, சொல்லிக்கொடு , தட்டிக்கேள்
2. செயற்படுபொருள் குன்றாத வினை - படித்தான் , விற்றான், தொடுவான்
3. செயற்பாட்டு வினை - திறக்கப்படும் , கொடுக்கப்படும் , கூறிவந்தார்
4. தன்வினை - போனாள், வருகின்றான், ஏறினான்

புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

31.பாடசாலை சுற்றுலா செல்வதற்கு முன் எம்மிடம் பொருத்தமான …….. இருக்க வேண்டும்.
1. கள ஆய்வு 2. அறிவுறுத்தல் 3. முன்னேற்பாடு 4. நிலைப்பாடு

32. மு/தண்டுவான் மகா வித்தியாலய மாணவர் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடும் மாணவர் தங்கள் ……. செலுத்தினர்.
1. கட்டுப்பணம் 2. வங்கிப்பணம் 3. சந்தாப்பம் 4. முற்பணம்

33. இலங்கை பண்டைய காலத்தில் நெல் உற்பத்தியில் ……. பெற்ற நாடாக திகழ்ந்தது
1. தன்னிறைவு 2. முழுமை 3. வளர்ச்சி 4. செழிப்பு

34. காணாமற்போன தனது மகனை கண்டறிந்து தருமாறு அப்பிள்ளையின் தாயால் நீதிமன்றத்தில் ……. தாக்கல் செய்யப்பட்டது.
1. அழைப்பாணை 2. ஆட்கொணர்வு மனு 3.பிடியாணை 4. சுற்றறிக்கை

35. பிரியங்கா வேகமாக ஓடினாள். பிரியங்கா ஓட்டப்போட்டியில் வெற்றி பெறவில்லை. இவ்வாக்கியங்களை இணைக்க பொருத்தமான இணைப்பிடைச் சொல்
1. ஆகவே 2. எனவே 3. ஆனால் 4. உம்

36. கடும் மழையினால் குளங்கள்
1. ஒவ்வொன்றும் நிறைந்தது 2. எல்லாம் நிறைந்தன
3. ஒவ்வொன்றாக நிறைந்தன 4. எல்லாம் நிறைந்து

தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு பொருத்தமான விடையைத் தெரிக.

நஞ்சிருக்கும் தோலுரிக்கும் நாதன் முடிமேலிருக்கும்
வெஞ்சினத்துப் பற்பட்டால் மீளாது -விஞ்சுமலர்த்
தேம்பாயுஞ் சோலைத் திருமலைராயன் வரையில்
பாம்பாகும் வாழைப்பழம்

37. இப் பாடலில் ஒப்பிடப்படும் இரு பொருட்கள் எவை?
1. நஞ்சு, தோல் 2. பாம்பு , வாழைப்பழம் 3. சோலை, திருமலைராஜன் 4. நஞ்சு, பாம்பு

38. இதில் வந்துள்ள அணி
1. உவமை 2. உருவகம் 3. இயல்பு 4. சிலேடை

39. இவ் வகையான பாடல்களை பாடுவதில் கைதேர்ந்தவர்
1. கம்பர் 2. வள்ளுவர் 3. காளமேகம் 4. ஒட்டகூத்தர்

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றி காணப்படுகின்றன. அவற்றின் சரியான ஒழுங்குமுறை
அ. திருவெண்ணெய் நல்லூரில் வாழ்ந்த சடையப்ப வள்ளல் கம்பரை ஆதரித்தார்
ஆ. இந்த இடங்களில் வள்ளலின் கொடை , பண்பு, புகழ் , பெருமை முதலியவற்றை நன்றியோடு பாராட்டினார்.
இ. தம்மை ஆதரித்த சடையப்ப வள்ளலை கம்பர் பத்து இடங்களில் இராமாயணத்தில் குறிப்பிட்டு உள்ளார்.
ஈ. வெண்ணெய் நல்லூர்ச் சடையன் வழி முன்னோன் எடுத்துக் கொடுக்க வசிட்டன் மூடி சூட்டினான் என்று கம்பர் பாடினார்.
உ. இராமாயணத்தில் இராமன் மூடிசூடும் சடங்கு நிகழ்கின்றது.

1. அ,இ,ஆ, உ, ஈ 2. ஈ, உ, ஆ, இ, அ
3. உ. ஆ, ஈ, அ, இ 4. அ, இ, ஈ, உ, ஆ

PAST PAPERS WIKI

மாகாணக்கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
மூன்றாம் தவணை – 2025
தமிழ்மொழியும் இலக்கியமும்

தரம் - 10 **நேரம் - இரண்டு மணித்தியாலயங்கள்**

பகுதி II

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.

01. சுருக்கமான விடை எழுதுக.

1. சுதந்திர இந்தியாவே எனது நோக்கம் எனக் காந்தியடிகள் கூறுகின்றார். இவ்வாக்கியத்தின் எழுவாய், பயனிலைகளைத் தருக.
2. அணை என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வர வாக்கியம் அமைக்குக
3. எனக்கு அதெல்லாம் தெரியுமே என்று மகளிடம் கேட்டேன்
   பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.
4. "விலங்கியற்கையிலையெனில்யாமெலாம்"
   மேலுள்ள தொடரை சந்தி பிரித்து எழுதுக.
5. இனி அடிதான் வாங்கப் போறாய் என்னட்டை . பேச்சு வழக்கிலுள்ள இவ்வாக்கியத்தை எழுத்து வழக்கிற்கு மாற்றி எழுதுக.
6. கடதாசி, சிப்பந்தி எவ்வெம்மொழிச் சொற்கள் எனக் குறிப்பிடுக.
7. பாரதியார் சுயசரிதையை இயற்றினார். இச்செய்வினை வாக்கியத்தை செயற்பாட்டு வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.
8. பரிசளிப்பு விழாவிற்குப் பிரதம் விருந்தினர் வருகை தரவில்லை. எதிர்மறை வாக்கியத்தை உடன்பாட்டு வாக்கியம் ஆக்குக.
9. புகழ்பெற்ற கவிஞ்ஞர் கூட்டத்துக்குச் சமூகமழித்தார்.
   மேலுள்ள வாக்கியத்தை எழுத்து வழுக்களை நீக்கி சரியாக எழுதுக.
10. அவர்கள் தம்மை வருத்தி மிகக் கடுமையாக உழைத்தனர்.
    அவர்களாற் போதிய வருமானத்தை ஈட்ட முடியவில்லை. பொருத்தமான இணைப்பிடைச் சொல்லைப் பயன்படுத்தி இரு வாக்கியங்களையும் ஒரு வாக்கியமாக எழுதுக.

(20 புள்ளிகள்)

02. பின்வருவனவற்றுள் ஒன்றை தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்கு பொருத்தமான தலைப்பு இடுக.

அ. இன்று வீதி விபத்துக்களால் பல்லாயிரம் மக்கள் இறக்கின்றனர். பலர் அங்கவீனர் ஆகின்றனர். முதியவர்களை விட இளையவர்களே இதில் நேரடியாக பாதிக்கப்படுகின்றனர். பொறுப்பற்ற சாரதியம், வீதி ஒழுங்குகளை மதியாமை, போட்டி மனப்பாங்கு போன்ற காரணங்களால் இவ் விபத்துக்கள் ஏற்படுகின்றது. அரசாங்கம் இவற்றை இழிவளவாக்கம் செய்ய எடுக்கும் நடவடிக்கைகள் பயனற்று போகின்றது. மனிதன் பொறுப்புடன் செயற்பட்டாலே இவ் விபத்துக்களை குறைக்க முடியும். எனும் முடிவை வலியுறுத்தி விளக்கக் கட்டுரை எழுதுக.

ஆ. இன்று தொலைபேசி பாவனைக்கு அடிமையாகத் தவழும் குழந்தை முதல் பெரியர்கள் உள்ளனர். மனித வர்க்கத்துக்கு உதவியாக அறிமுகப்படுத்தப்பட்டாலும் இன்று உபத்திரமாக மாறிவிட்ட ஒன்றாக தொலைபேசி காணப்படுகின்றது. இதனால் மாணவர் கற்றல் அடைவு வீழ்ச்சி ஏற்படுகின்றது. தொலைபேசி இல்லா உலகில் இழந்த கல்வியை மீட்டெடுப்போம் எனும் தலைப்பில் முத்தமிழ் மன்றத்தில் ஓர் சொற்பொழிவு ஆற்றுக.

இ. மாறிவரும் உலகுக்கு ஏற்ப வேலையுலகுக்கு தயார்ப்படுத்த தொழிற்கல்வி அவசியம் பற்றி உரையாடல் எழுதுக.

ஈ. தனது தந்தையை இழந்த பஞ்சலிங்கம் தாயாரின் தியாகத்தால் படித்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டு உள்ளான். எவ்வித தீய பழக்கமும் அற்ற பஞ்சலிங்கம் சோலையூர் மக்களிடம் அன்பாக பழகி வந்ததால் அவனைப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்ப எல்லோரும் திரண்டனர். தாயிடமும் மக்களிடமும் விடைபெற்று ரயிலின் ஜன்னல் அருகில் அமர்ந்த பஞ்சலிங்கம் ஓடும் ரயில் சக்கரங்களுக்கு இடையில் சிந்தனையை சுழல விட்டான். அவன் எதிர்பாராத நேரத்தில் அந்த ரயிலில்..... வாழ்வில் வெற்றி பெறுவானா பஞ்சலிங்கம் எனும் கதையை உள்ளடக்கி சிறுகதை எழுதுக. (25 புள்ளிகள்)

03. பின்வரும் உரைப்பகுதியின் கருத்தை 40-95 சொற்களில் அமையக் கூடியவாறு சுருக்கி எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக)

" இலக்கியத்தில் இலகுபடுத்தி எழுதலாமோ?" என்ற கேள்வி இப்பொழுது எழுந்துள்ளது. இதை "ஈழமுரசு" வாயிலாக அறிந்தேன். "மக்கள் இல்லாமல் மொழி இல்லை" என்ற கோட்பாட்டை கலையருவி பேராசிரியர். க.கணபதிப்பிள்ளை அழுத்திக் கூறுவார். இது தனிப்பெரும் கோட்பாடு. ஒரு காலத்தில் "பண்டிதர் தொடக்கம் பாமரர் வரை" கற்றவரும் மற்றவரும்" என்றெல்லாம் பேசினார்கள். இவை அழகான சொற்றொடர். இவற்றை நோக்கலாம்

"பண்டிதர் தொடக்கம் பாமரர் வரை" என்பதன் பொருளைக் கவனிக்கலாம். பண்டிதர் கற்றவர் ; பாமரர் கல்லாதவர் அறிவு குறைந்தவர், கற்றவர் என்றுமே எல்லா மொழியிலும் எல்லா நாட்டிலும் இருப்பர் ; ஆனால் "பாமரர்" என்ற சொல்லை வழக்கிலிருந்து நீக்க வேண்டும். இன்று நிகழ்வது குடியாட்சி, மக்களாட்சி எல்லோரும் இந்நாட்டு மன்னர், பொதுமக்களின் மேம்பாட்டிற்காக இன்று கட்டாய இலவச கல்வி நிகழ்கின்றது. எழுத்தறிவின்மையைப் போக்க அரசு முயற்சி செய்கின்றது. ஐக்கிய நாடுகளின் கல்வி விஞ்ஞான கலாசார நிலையம் இதற்காக உழைத்து வருகின்றது. எனவே பாமரர் என்ற ஒரு பிரிவினர் மக்கள் நடுவே இருக்கக்கூடாது. எல்லோரும் கல்வி கற்று முன்னேற வேண்டும்.

அதே நேரம் எம் நடுவே பண்டிதர், வித்துவான் , புலவர், கலாநிதி போன்ற பட்டம் பெற்றவரும் இருத்தல் வேண்டும். இவர் மூலம் மொழிவளமடைதல் முக்கியம். இந்த மொழிவளத்தைப் பொதுமக்களும் விளங்கிக் கொள்ளுதல் இன்றியமையாதது, வளரும் மொழி , வாழும் மொழி யாவற்றிற்கும் இக்கருத்துப் பொருந்தும் வழக்கொழிந்த மொழி என்ற நிலை தமிழ்மொழிக்கு ஏற்படக் கூடாது ; ஏற்படவும் கூடாது. எனவே, பொதுமக்களில் பெரும்பான்மையினரை "பாமரர்" எனக் கூறுதல் நன்றன்று. காலத்திற்கு நன்றன்று. காலத்திற்கு ஏற்ப "பண்டிதர் தொடக்கம் பொதுமக்கள் வரை" என வேண்டுமானால் மாற்றிக் கொள்ளலாம்

(10 புள்ளிகள்)

04. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

வானம் பார்த்த பூமியில் வாழும் மக்கள் மழையை வேண்டிப் பாடுவதும் வழிபாடு செய்வதும் வழக்கம். இவ் வழக்கம் உலக மக்கள் பண்பாட்டில் இடம்பெறுகின்றது வான் சிறப்பிற்குத் தமிழ் மக்கள் என்றும் தனியிடம் கொடுத்துள்ளனர். இதற்குத் திருக்குறள் சிலப்பதிகாரம் போன்ற பழம்பெரும் தமிழ் நூல்கள் சான்று பகரும். இவை செந்தமிழ் தரும் சான்று. நாட்டார் இலக்கியத்திலும் மழைக்கு நிறைய இடம் உண்டு.

யாழ்ப்பாணம் வானம் பார்த்த பூமி, இங்கு வற்றாத பேராறு எதுவும் இல்லை. மழை நீரைத் தேக்கி வைக்க இப்பகுதித் தமிழப் பழங்குடிகள் பழகிக் கொண்டனர். இதனால் சிற்றாறு, ஓடை, குளம், கேணி என்பவற்றை இம்மக்கள் ஆக்கி வைத்தனர். இடப்பெயர் பலவும் நீர்

Past Papers Wiki

நிலைகளைக் கொண்டு முடிவடையும். எடுத்துக்காட்டு: தொண்டைமான் ஆறு, கந்தரோடை, பூவரசங்குளம், வெற்றிலைக்கேணி கடும் வரட்சி நிலவும் போது மக்கள் சடங்குகள் செய்வர். அவற்றில் இரண்டு மழை இரங்கிப் பொங்கற் பாட்டு, கொடும்பாவி எரிப்புப் பாட்டு என்பவை இங்கு குறிப்பிடக் கூடியவை.

1.வான் சிறப்புக்கு தனியிடம் கொடுத்த மக்கள் யார்?

2.வான் சிறப்புக்கு செந்தமிழ் தரும் சான்றாதாரங்கள் எவை?

3.மழைநீரைத் தேக்க யாழ் மக்கள் ஆக்கிய நீர் ஆதாரங்கள் எவை?

4.மழை பெய்ய மக்கள் நிகழ்த்தும் சடங்கு முறைகள் எவை?

5.வானம் பார்த்த பூமி என்பதால் நீர் விளங்குவது யாது?

(10 புள்ளிகள்)

05. நீர்வையூர் கிராமத்தில் வீதிகள் நீண்ட காலமாக செப்பனிடப்படவில்லை. இதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றது. நோயாளர் . மாணவர்கள் பிரயாணம் செய்வது கடினமாக உள்ளது. இதனை உரிய அதிகாரிகளுக்கு எடுத்துக்காட்டி வீதியை சீர்செய்து தருமாறு கேட்டு "வாசகர் திருமுகத்துக்கு" கடிதம் எழுதுக.

அல்லது

உமது பாடசாலையில் நடைபெற்ற முத்தமிழ் விழா பற்றி முத்தமிழ் மன்ற செயலாளராக உம்மை கருதிக்கொண்டு அறிக்கை எழுதுக

(15 புள்ளிகள்)

மாகாணக்கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
மூன்றாம் தவணை – 2025

தமிழ்மொழியும் இலக்கியமும்
தரம் - 10
நேரம் - இரண்டு மணித்தியாலயங்கள்

பகுதி III

1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தேர்வு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக

(1) எல்லா வினாக்களுக்கும் சுருக்கமான விடை தருக.

1) யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல் வேண்டும்

அ) நண்பொரீஇ என்பதன் பொருள் யாது?
ஆ) சிறந்த நட்பிற்கு எடுத்துக்காட்டாய் அமைவது எது?

2) புலன்களோடு கரணமும் ஆவியும்
போந்து நின்ற விருப்புடன் மானிடன்

அ) அந்தக் கரணங்கள் எவை?
ஆ) ஐம்புலன்களும் எவை?

3) கொங்கர்க்கமரா பதியளித்த
கோவே யிராச குல திலகா
அ) கோ எனக் குறிப்பிடப்படுபவன் யார?
ஆ) அமராபதி என்பதன் பொருள் யாது?

4) சுடு மயானத் திடை தன்றுணையேகத்
தோன்றல்துயர்க் கடலினேகக்
அ) துணை எனக் குறிப்பிடப்படுபவர் யார்?
ஆ) தோன்றல் யார்?

5) எமிரோ வோரி என்பாள்
எந்துண்டி வஸ்தி என்பாள்
அ) இக்கூற்று இடம் பெறும் சிறுகதை எது?
ஆ) இது யாருடைய கூற்றாக அமைந்துள்ளது?

6) எத்தனை பக்கம், எத்தனை வரிகள் , எத்தனை பராக்கள் என்று கச்சிதமாகச் சொல்லிவிடும்
அ) இவ்வாறு குறிப்பிடப்படும் பொருள் எது?
ஆ) பராக்கள் என்பதன் தமிழ் வடிவம் யாது?

7) மாதம் மூன்று மழையுள்ள நாடு
வருஷ மூன்று விளைவுள்ள நாடு
அ) இங்கு நாடு எனக் குறிப்பிடப்படுவது எது?
ஆ) இங்கு வெளிப்படுத்தப்படும் நாட்டு வளம் யாது?

Past Papers Wiki

8) பாரிற் பிண்ணாக்கு முண்டாம்
அ) பிண்ணாக்கு என்ற சொல் இரு பொருள்பட புலப்படுமாற்றை தருக.
ஆ) பிண்ணாக்குடன் தொடர்புபடுத்திச் சிலேடையாக ஒப்பிடப்படும் இரு பொருளும் எவை?

9) சினந் தரிவி வெட்டும் இளந்தாரி மாரை
கண்ணூறு படாமற் காரும் ஐயனாரே
அ) இங்கு வெளிப்படும் கிராமிய நம்பிக்கை யாது?
ஆ) இங்கு குறிப்பிடப்படும் கிராமிய தெய்வம் யாது?

10) "அது கிடக்க எடுத்துக்கொண்டு வா தந்தி தபாற் கட்டுக்களை" இக்கூற்று
1. யாரால்
2. யாருக்கு
கூறப்பட்டது

(10 x 2= 20 புள்ளிகள்)

2) பின்வரும் செய்யுள் பகுதியினையும் உரை நடைப் பகுதியினையும் வாசித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக

அ) உப்பில்லாக் கஞ்சியினை யுண்ணு மறு சுவை போல்
தப்பிய கந்தை பீதாம்பரம் போல் -ஒப்பும்
பனையோலைப் பாயிற் படுத்து உறங்கும் வாழ்வார்
மனங் கொண்டது மாளிகை

1. இங்கு மன நிறைவை தரும் செயல்கள் எவை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது?
2. இங்கு இடம் பெறும் முதுமொழியைக் குறிப்பிடுக.

ஆ) சூழமேதி யிறங்கும் துறையிற்
சொரியும் பாலைப் பருகிய வாளை
கூழை வாசப் பலாவினிற் பாயக்
கொழும்ப லாக்கனி வாழையிற் சாய
வாழை சாய்ந்தொரு தாழையிற்றாக்க
வருவிருந்துக் குபசரிப்பார் போல்
தாழை சோறிட வாழைக்குருத்திடுஞ்
சந்திர சுடர் தென்னாரிய நாடே

1. இங்கு வெளிப்படுத்தப்படும் நாட்டு வளம்?
2. அணிப் பயன்பாடு

இ). பட்டி பெருக வேணும் தம்பிரானே
பாற்பானை பொங்க வேணும் தம்பிரானே
மேழி பெருக வேணும் தம்பிரானே
நல்ல மழை பெய்ய வேணும் தம்பிரானே
ஏர் தழைக்கவேணும் தம்பிரானே
எல்லோரும் வாழ வேண்டும் தம்பிரானே

1. விவசாயியின் பரந்த நோக்கு எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது?
2. ஏர் தழைக்க வேணும் என்ற அடி உணர்த்துவது யாது?

ஈ) சினிமா திரைப்படமாக்கப்பட்ட நாடகம் அல்ல . இது ஒரு அடிப்படையான வித்தியாசம். நிகழ்ச்சி ஒன்றை அவையோரின் முன் நிகழ்த்திக் காண்பிப்பது நாடகம். சினிமாவின் தன்மை வேறு தமிழ்நாட்டில் சினிமா வளராததற்கு ஒரு முக்கிய காரணம் அது நாடகத்துக்கு அடிமைப்பட்டு இருப்பது தான் இதற்கு வரலாற்று ரீதியான காரணமும் உண்டு

1. நாடகம் என்ற சொல் உணர்த்தும் பொருள் யாது?
2. சினிமா வளராமைக்குக் காரணமாகக் குறிப்பிடப்படுவது யாது?

உ) நாங்கள் எல்லாவற்றையும் காரிலே ஏற்றி திரும்பி வரும்போது நண்பர் 486 கம்ப்யூட்டர் 486 கம்ப்யூட்டர் என்று உச்சாடனம் செய்தவாறே அதன் வீரப் பிரதாபங்களைப் பற்றி ஒரு பரணி பாடினார்

1.இங்கு குறிப்பிடப்படும் பிரபந்தம் யாது?
2.உச்சாடனம் என்பதன் கருத்து யாது? (20 புள்ளிகள்)

3) குகப்படலத்தில்
அ) கோசலையின் சிறப்பு
ஆ) கைகேயியின் இழிவு
என்பவை வெளிப்படுத்தப்படும் வகையை விளக்குக.
அல்லது

திருக்குற்றாலக் குறவஞ்சியில்
அ) நாட்டு வள சிறப்பு
ஆ) மலைவாசிகள் செயல்கள்
என்பவை வர்ணிக்கப்படும் விதத்தை விளக்குக (15 புள்ளிகள்)

4) கம்பியூட்டர் சிறுகதையில்
அ) நகைச்சுவை உணர்வு
ஆ) வாழ்வியல் பண்பாட்டு அம்சம்
என்பவை சித்திரிக்கப்படுவதை விளக்குக
அல்லது

நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையில்
அ) நாவலர் வாதத்திறன்
ஆ) வாதமகா சபையின் சித்தரிப்பு

என்பன எடுத்துரைக்கப்படுமாற்றினை தெளிவுபடுத்துக. (15 புள்ளிகள்)

5,6,7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தேர்வு செய்து விடை எழுதுக

5) நீதிப் பாடல்களை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக
அ) இனியவைகள்
ஆ) இன்னாதவை (10 புள்ளிகள்)

6) தனிப் பாடலை ஆதாரமாகக் கொண்டு
அ) சீதக்காதியின் கொடைச் சிறப்பு
ஆ) காளமேகப் புலவரின் கவியாற்றல் என்பவை வெளிப்படும் விதத்தை விளக்குக.
(10 புள்ளிகள்)

7) பாரதியார் சுயசரிதையில்
அ) விரும்பியவற்றை அடைய முடியாதவர்
ஆ) விரும்பியவற்றை அடையும் வழி
என்பவற்றை விளக்குக (10 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library